Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 43

திங்கட்கிழமை
08 ஜனவரி 2024

மார்கழி 23 ஆம் நாள்
ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"அப்ப இப்ப போடுற திட்டங்களுக்கும் நினைவுக்கல் தான் வைக்கவேணும் போல"

இலங்கையின்

# தமிழ் நாகரிகம் வட மாகாணமே



யாழ்ப்பாணமே இந்து மதத்தின் மையம்

நல்லூர்த் திருவிழாவை மையப்படுத்தி சுற்றுலா

ஜனாதிபதி ரணில் நேற்றுத் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 8**

**இலங்கையின் தமிழ் நாகரிகம் வட மாகாணம். யாழ்ப்பாணம் இந்து மதத்தின் மையப்பகுதி. வடமாகாணத்தின் முக்கியத்துவத்தை அப்படியே பேணிக்காத்து, வடக்கின் பொருளாதாரத்தை நாட்டின் தேசிய பொருளாதாரத்துடன் துரிதமாக இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

11

## அடிக்கல்லா? நினைவுக்கல்லா?

### சிரித்து சமாளித்த ரணில்

யாழ்ப்பாணம், ஜன. 8

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது அடிக்கல் நட்ட கட்டடத்துக்கு நிதி விடுவிக்கப்படாமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது, அடிக்கல்லுக்கு மேல் நினைவுக்கல்லைத் திறந்து வையுங்கள் என்று சிரித்துக் கொண்டே சமாளித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு 4 நாள்கள் சுற்றுப்பயணமாக வந்திருந்தார். கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

11

## விசேட விமானத்தில் கொழும்பு பறந்த ரணில்

யாழ்ப்பாணம், ஜன. 8

வடக்குக்கான 4 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு பலாலியிலிருந்து விமானப்படை

11

## போதைக்கு அடிமையானோர் புனர்வாழ்வுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 8

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையான இருவர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

11

## சரசாலைக் காடு: விடுவிக்கத் தயக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றின் காணிகளை விடுவிக்க இணங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சரசாலையில் அமைந்துள்ள காட்டுக்குரிய காணிகளை விடுவிக்கத்தான் வேண்டுமா என்பது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தி

11

## ஒவ்வொரு மதங்களுக்கும் தனியான அமைச்சுகள்

### மதத்தலைவர்களின் கோரிக்கையை கண்டுகொள்ளாத ரணில்

யாழ்ப்பாணம், ஜன. 8

முன்னர் இருந்ததைப்போன்று இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என ஒவ்வொரு மதத்துக்கும் தனித்தனியாக அமைச்சுகள் உருவாக்கப்பட வேண்டும் என அகில இலங்கை சைவக்குருமார் ஒன்றியத் தலைவரும் சர்வமத அமைப்பின் தலைவருமான

11

## மடு மாதாவின் திருப்பயணம்

மன்னார், ஜன. 8

1924 ஆம் ஆண்டு கொழும்பு ஆயருடன் இணைந்து இந்தியாவிலிருந்து வந்த ஆயர்களும் இணைந்து மடு அன்னைக்கு முடிசூட்டப்பட்டு 100ஆவது ஆண்டு யூபிலி தினத்தை முன்னிட்டு மடு அன்னையின் திருச்சொரூபம் மடுவிலிருந்து மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய மன்னார் மறைமாவட்டங்களின் பங்குத்

09



## யாழ். நகரில் மருந்தகத்திலிருந்து போதை மாத்திரைகள்

மீட்டதாக பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாண நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல மருந்தகத்திலிருந்து

11

## வடக்கில் சாதிப்பிரச்சினையை தீர்க்கப்போகிறாராம் ரணில்

யாழ்ப்பாணம், ஜன. 8

வடக்கின் சிவில் சமூகத்தில் நிலவும் சாதிப் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதுடன், அந்தப் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11

## இந்திய மீனவரை கட்டுப்படுத்த வக்கில்லை: செங்கடலை கடற்படை எப்படிப் பாதுகாக்கும்?

ஈ.பி.டி.பி.யினர் சுட்டாலும் குரல் கொடுப்பதை நிறுத்தமாட்டோம் என அன்னராசா சீற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 8

இலங்கைக் கடற்படையினர் செங்கடலில் கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்துவதற்காக இங்கிருந்து சென்றுள்ளனர்.

11

## கிணற்றுக்குள் ஊறும் மண்ணெண்ணெய்!

உடையார்கட்டில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 8

உடையார்கட்டு, குரவில் கிராமத்தில் கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் வெளியேறி வருகின்றமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்கள் புரிவோர் இனி ஒரு நாளுக்குள் கைது

## செயற்றிட்டம் இறுக்கம்; அமைச்சர் அலஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

**சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நாட்டைவிட்டு இனி வெளியேறமுடியாது. ஒரு குற்றச்செயல் இடம்பெற்று 24 மணிநேரத்துக்குள் குற்றச்செயலுடன் தொடர்புடையோர் கைதுசெய்யப்படுவர். அதற்குக் கடுமையான திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நபர்களை சுயமாக அடையாளப்படுத்தும் நவீன இயந்திரம் பொருத்தும் நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நாட்டைவிட்டு இனி வெளியேற முடியாது. ஒரு குற்றச்செயல் இடம்பெற்று 24 மணிநேரத்துக்குள் குற்றச்செயலுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைதுசெய்வர் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

பழைய பேருந்து நிலையத்தில்

# சமூகச் சீர்கேடு!

## வவு. மக்கள் விசனம்

வவுனியா, ஜன. 8

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பாவனையற்ற கட்டடங்களில் தொடர்ச்சியான சமூகச் சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன. பொலிஸார் இதுதொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பழைய பேருந்து நிலையம் செயற்பட்ட காலத்தில் பயணிகள் காத்திருப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டடங்கள் பிற்காலத்தில் உள்ளூர் விற்பனை நிலையங்களாக மாற்றப்பட்டன. தற்போது இந்தக் கட்டடங்கள் பாவனையின்றிக் கைவிடப்பட்டுள்ளதனால் அவற்றுக்குள் சமூகச் சீர்கேடுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-110.18)

## கணவன் கொலை மனைவி கைது

கொழும்பு, ஜன. 8

கணவனைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் மஹியங்கனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன் தன்னையும் இரண்டு பிள்ளைகளையும் தாக்கி தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்று மனைவி விசாரணையில் தெரிவித்தார். (ச-இ)

## மாவா விற்பனை: கைதானார் பெண்

யாழ்ப்பாணம், ஜன. 8

நெல்லியடி - துன்னாலை கிழக்கு கரவெட்டிப் பகுதியில் கஞ்சா கலந்த மாவா பாக்கை விற்பனை செய்த யுவதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-23)


## ஐஸ் போதைக்கு அடிமை; யுவதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 8

ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையான யுவதியொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாய், தந்தை இல்லாத நிலையில் பேர்த்தியாருடன் வாழ்ந்துவரும் யுவதியே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-100)

## வடமராட்சி கிழக்கில் ஒதுங்கிய மர்மப்படகு



யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று நேற்றுமுன்தினம் காலை கரையொதுங்கியுள்ளது.

படகில் காணப்படும் மீன்பிடித் திணைக்களத்தின் பதிவு இலக்கம் அழிக்கப்பட்டுக் காணப்படுவதால் குறித்த படகை போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பாவித்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. இதுதொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மற்றும் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை- வடமராட்சி கிழக்கு - உடுத்துறையில் பௌத்த கொடியுடன் மிதப்பு ஒன்றும், மூடிய கொள்கலன் ஒன்றும் அண்மையில் கரையொதுங்கின. தற்போது படகொன்றும் கரையொதுங்கியமை அங்கு பரபரப்பாகியுள்ளது. (ம-27)

## தென்னக்கோனுக்கு சட்ட நடவடிக்கை

### சட்டமா அதிபருக்குக் கடிதம்

கொழும்பு, ஜன.8

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளடங்கலாக 107/2011 இலக்கமிடப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்திடம் சட்டத்தரணிகள் கூட்டிணைவு உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் கடிதம் மூலம் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகிக்கும் தேசபந்து தென்னக்கோன் உயர்நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவாக ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தனர். அந்த வழக்கில் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என தற்போது கடிதம் மூலம் கோரியுள்ளனர். (எ-இ)

## பொலிஸ் அடாவடிகளை எதிர்க்காவிடில் ஆபத்து!

### சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.8

பொலிஸாரின் அடாவடிகளுக்கு எதிராகக் குரல் எழுப்பாவிட்டால், சில பொலிஸ் அதிகாரிகளின் மோசமான நடத்தையால் நாட்டு மக்கள் அனைவரும் வெகுவிரைவில் பாதுகாப்பற்றவர்களாக உணர்வார்கள் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொள்ளுப்பிட்டி சோதனைச் சாவடி ஒன்றில் சில பொலிஸ் உத்தியோகத்தர்களால் தனது மகன் மோசமாக நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தந்தை ஒருவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். பொலிஸ் துறைக்குக் கரும்புள்ளியை ஏற்படுத்தும் வகையில் சில பொலிஸ் அதிகாரிகளால் பொதுமக்களை ஒடுக்குமுறைக்கும், மீறல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# சட்டங்களை மீறியே பொலிஸார் சோதனை

## சட்டத்தரணிகள் சங்கம் விசனம்

கொழும்பு, ஜன.8

பொலிஸ் சோதனை நடவடிக்கைகள் செல்லுபடியாகும் உத்தரவுகளின்றி மேற்கொள்ளப்படுகின்றன. அதனால் சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள செயன்முறைகள் மீறப்படுகின்றன. இது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கட்டமைப்புகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைத் தகர்க்கின்றது- இவ்வாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

பொலிஸாரின் செயற்பாடுகளுக்காக அவர்களைப் பொறுக்கூறச் செய்யப்படாமையும், தண்டனையில் இருந்து விடுபடும் போக்கும் கருத்தில் கொள்ளப்படாமையால், எந்த நபரும் பாதுகாப்பாக உணர முடியாத நிலைமையை நாட்டில் உருவாக்கும் என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் உரிய சட்டச் செயன்முறைகளைப் பின்பற்றுவதில்லை என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துவரும் நிலையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கைது செய்தோரை உடனடியாக விடுவிக்கவேண்டும்

## யாழ். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.8

**வவுனியாவில் கைது செய்யப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தலைவி இளங்கோதை தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை விடுவியுங்கள், காண்பியுங்கள் என்று கோரியே நாம் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம். அரசாங்கத்திடம் வேறு எதையும் நாம் கேட்கவில்லை.

வவுனியாவில் நேற்று (நேற்றுமுன்தினம்) போராட்டத்தில் ஈடுபட்ட வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவி ஜெனிற்றாவை பொலிஸார் பலவந்தமாக இழுத்துச் சென்று கைது செய்துள்ளனர். அதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

ஒரு பௌத்த மத குரு தமிழர்கள் அனைவரையும் வெட்டிக் கொல்லுவேன் எனப் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். ஆனால், அவரைஇன்று வரை கைது செய்யவில்லை. அவ்வாறானவர்களை விடுத்து ஜனநாயக ரீதியில் எமது பிள்ளைகளைக் கேட்டு போராடுகின்ற எங்களைக் கைது செய்கின்றமை அரசாங்கத்தின் கொடூர ஆட்சியை வெளிப்படுத்துகின்றது- என்றார். (எ-26-125-27)

# தோடம்பழம் விலை சரிவு

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்.குடாநாட்டில் இறக்குமதி செய்யப்படும் தோடம்பழத்தின் விலை திடீரென சரிந்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கை வியாபாரிகளால் பெரும் எண்ணிக்கையிலான தோடம்பழங்கள் எடுத்துவரப்பட்டு யாழ். நகர் உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. மூன்று தோடம் பழங்கள் தற்போது நூறு ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

# இஞ்சி விலை சடுதி உயர்வு

கொழும்பு, ஜன. 8

இஞ்சியின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது என்று இஞ்சி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக 2,000 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வந்த இஞ்சி, தற்போது ஒரு கிலோ இஞ்சியின் விலை 3,000 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இஞ்சி தேவையைப் பூர்த்தி செய்ய முடியாததால் அவற்றின் விலை உயர்ந்துள்ளது என்றும் இஞ்சி மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். (ச-இ)

# காலி சிறையில் மர்மக்காய்ச்சல்

## 8 கைதிகள் வரை பாதிப்பு

கொழும்பு, ஜன. 8

காலி சிறைச்சாலையில் தற்போது 7 கைதிகள்வரை காய்ச்சல் காரணமாக காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று காலி சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

5 கைதிகள் காய்ச்சல் காரணமாக ஏற்கனவே சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மேலும் 3 கைதிகள் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். சில தினங்களுக்குமுன், காலி சிறையில் கைதியொருவர் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# குறைந்த செலவு சுற்றுலாப் பட்டியலில் இலங்கை!



கொழும்பு, ஜன. 8

விடுமுறையை சிறப்பாக குறைந்த செலவில் கழிக்கக் கூடிய உலகின் சிறந்த சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக இலங்கையும் இடம்பிடித்துள்ளது.

பொக்ஸ் நியூஸ் (Fox News) தயாரித்துள்ள குறைந்த செலவில் சுற்றுலா செல்லக்கூடிய இடங்கள் பட்டியலிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா,கிரேக்கம் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் இலங்கையும் ஒரு குறைந்த செலவில் சுற்றுலா செல்லக்கூடிய இடமாக பெயரிடப்பட்டுள்ளது. (ச-இ)

# கிரிக்கெட் வீரர்களுக்கு பொலிஸில் பதவிகள்

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கிரிக்கெட் வீரர்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

சாமர சில்வா, குசல் ஜனித் பெரேரா, நுவான் பிரதீப் மற்றும் அஷேன் பண்டார ஆகியோரே இவ்வாறு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உதினம் தெரியுமோ?

கூரையில ஏறிக் கோழி பிடிக்கவே முடியாதவனெல்லாம் வானம் ஏறி, வைகுண்டம் போக ஆசைப்பட்ட மாதிரித்தான் தமிழரசுக் கட்சிக்காரர் நடந்து கொள்ளுகினம். தங்கட கட்சியின்ர தலைவர் ஆர் எண்டு தெரிவுசெய்யிறதிலையே பிடுங்குப்பட்டுக் கொண்டிருக்கிறவை, எப்பிடி அடுத்த தேர்தலில வெண்டு தமிழ் மக்களின்ர உரிமையளை வாங்கிக் குடுப்பினம் எண்டுதான் சனமெல்லாம் யோசிக்குது.

ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தில இருக்கிற கோட்டக்கிளையளைக் கலைச்சுப் போட்டு அதுக்குப் புதிசா ஆக்களைத் தெரிவு செய்த பிறகு தலைவருக்கான தேர்தலை நடத்தச் சொல்லி இப்ப கட்சித்தலைவரா இருக்கிற மாவையருக்கு, சம்பந்தர் கடிதமொண்டு எழுதினவர். அந்தக் கடிதத்தை வெளியில விடாமல் சிலர் அமத்தப் பார்த்தவை. ஆனால் பிறகு ஒருமாதிரி மீடியாக்காரர் சிலர் அந்தக் கடிதம் வந்ததை மோப்பம் பிடிச்சதால, வேற வழியில்லாமல் 'கடிதம் வந்திருக்கு. 10 ஆம் திகதி அரசியல் குழுக் கூட்டம் வைச்சிட்டு, அதை மத்தியகுழுவில போட்டு முடிவை அறிவிப்பம்' எண்டு மாவையர் அறிவிச் சவர். இந்த மாதம் 21 ஆம் திகதி எலக்சன் வைக்க வேணும். ஆனால் இவை 10ஆம் திகதி அரசியல் குழுவைக் கூடினால், மத்தியகுழுவைக் கூட்டுற தெண்டால் 7 நாள் அவகாசம் குடுக்கோணும். அப்பிடிப்பார்த்தால் குறைஞ்சது 17 ஆம்திகதி தான் மத்திய குழுவைக் கூட்டமுடியும். ஒரு வேளை மத்தியகுழுக் கூட்டத்தில 'திருகோணமலையில தொகுதிக்கிளையளுக்கு புது ஆக்களை எடுப்பம்' எண்டு முடிவெடுத்தால், 4 நாளில் புது ஆக்களைத் தெரிவு செய்ய ஏலாதே? அப்ப திரும்பவும் சம்பந்தர் சொன்னதுக்கு மாறாத்தான் முடிவெடுக்கப் போகினம் எண்டது இப்பவே வெளிச்சுப் போட்டுது.

அதைவிட மத்தியகுழுவைக் கூட்டினபிறகு தான் முடிவைச் சொல்லுவம் எண்டு கட்சியின்ர இப்பத்தை தலைவர் மாவையர் சொன்ன பிறகு, முந்தநாள் கட்சியின்ர பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் 'திட்டமிட்டபடி, அதேநாள்களில தலைவர் தெரிவும், மாநாடும் நடக்கும்' எண்டு அறிக்கை விட்டிருந்தவர். அவரின்ர அறிக்கைப்படி பார்த் தால், சம்பந்தரின்ர கடிதத்தை ஒரு துரும்புக்கும் மதிக்கேலை எண்டது பட்டெண்டு தெரியுது. அதைவிட யாழ்ப்பாணத்திலையே இன்னும் நாலு கோட்டக் கிளையளுக்கு ஆக்களைத் தெரிவு செய்து முடிக்கேலையாம். இந்தலட்சணத்தில சொன்ன நாளில கூட்டத்தை நடத்துவம் எண்டுறதெல்லாம், 'நாங்கள் என்ன திருகுதாளம் செய்தாவது எலக்சனை வைப்பம்' எண்டு சொல்லாமல் சொல்லுற மாதிரிக் கிடக்குது. இனித் தமிழரை மட்டுமில்லை, தமிழரசுக் கட்சியைக்கூட கடவுளாலையும் காப்பாத்த முடியாது போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் விநியோகம் நிர்ணய விலையில்!

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்டத்துக்கான மணல் சேவையை மாவட்டச் செயலர் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் வழிநடத்தலுடன் மணல் அகழ்வு இடம்பெறும் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் மணலைப் பெற்று, பயனாளிகளுக்கு நிர்ணய விலையிலேயே விநியோகித்து வருகின்றது என அந்தச் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நிர்ணய விலைக்கு புறம்பாக அதிகரித்த விலையில் மணல் விற்பனை இடம்பெறுவது தொடர்பாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் விளக்கமளித்துள்ள பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் தமது அறிக்கையில்;

பயனாளிகள் தத்தமது பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பித்து விண்ணப்பங்கள் அனைத்தும் மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்படுகின்றன. அவர்கள் பயனாளிகளின் விவரம் பட்டியலிடப்பட்டு கோவை இலக்கத்துடன் சங்கத்துக்கு அனுப்பி வைப்பார்கள். இம் மணலுக்கான கட்டணங்கள் அனைத்தும் (மணல் அகழ்வுக்கூலி, ஏற்றிப்பறிக்கும் வாகனக்கூலி) மாவட்டச் செயலகம், மருதங்கேணிப் பிரதேச செயலகம் இணைந்து மணலுக்கான நிர்ணயவிலையை அனுப்பிவைப்பார்கள். அந்தக் கட்டணங்களின் அடிப்படையில் பயனாளிகளிடமிருந்து கட்டணங்கள் பெறப்படும். பாரவூர்திச் சங்கம் பயனாளிகளுக்கு மணல் விநியோகித்து வருகின்றமை வழமையான செயற்பாடாகும்.

கடந்த டிசெம்பர் மாதமும் இடம்பெற்ற மணல் விநியோகம் மாவட்டச் செயலகம், மருதங்கேணிப் பிரதேச செயலகத்தின் வழிநடத்தலுடன் மணல் வழங்கிய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் குறித்த மாதத்துக்கான 210 கியூப் மணலில், எமது பாரவூர்திச் சங்கத்துக்கு ஒதுக்கித்தரப்பட்ட மணலை மருதங்கேணிப் பிரதேச செயலகத்தால் பரிந்துரை செய்யப்பட்டு எமது சங்கத்தில் பணம் செலுத்தியிருந்த பயனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே விநியோகத்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

# ரூ. 145 பில். நாணயத்தாள் அச்சிடல்

2023ஆம் ஆண்டு மத்திய வங்கி 145.44 பில்லியன் ரூபா பெறுமதியான நாணய தாள்களை அச்சிட்டுள்ளது. இதேவேளை- வருட இறுதியில் வர்த்தக வங்கிகளில் மக்களின் வைப்புத்தொகை அதிகரித்த காரணத்தால் மத்திய வங்கியின் இருப்பும் அதிகரித்துள்ளது. (அ-6)

பரு. மருத்துவமனையில்

# டெங்கால் இட நெருக்கடி!

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்படும் டெங்கு நோயாளர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதனால் மருத்துவமனையில் மீண்டும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (அ-ஒ-100)

# இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் கடிதம் கையளிப்பு

கொழும்பு, ஜன. 8

இந்தியாவுக்கான புதிய இலங்கைத்தூதுவர் ஷேனுகா செனிவிரத்ன கடந்த சனிக்கிழமை இந்திய ஜனாதிபதி திரௌபதி மும்முவிடம் தனது நியமனக் கடிதத்தை கையளித்துள்ளார். இந்தியாவுக்கான இலங்கையின்முன்னாள்தூதுவர்மிலிந்த மொறகொட பௌத்த மகா சங்க சம்மேளனத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-6)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1954

மறைவு 02 . 01 . 2024



### தர்மராசா அன்னமலர்

2 ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசா அன்னமலர் 02.01.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் இக்கினேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் அன்நேசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னரத்தினம், அன்னமரியம்மா, அன்னபாக்கியம், அன்னராஜசிங்கம் மற்றும் அன்னச்செல்வராசா, அன்னநேசமனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மராசா அவர்களின் மனைவியும், கவிதா, ஜீவிதா, ஜேம்ஸ்ராஜா (கனடா), டென்சிகா, லக்சலா (பெல்ஜியம்), ஜிந்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜேம்ஸ்சன், அனுவரன் (சவுதி), அகல்யா, நிறோஜன்றூஜி, தமிழ் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பான மாமியாரும், ஜொனிறிக், அக்ஷனா, அஜய், பூமிகா, ஒலிவியா, ஒலிவர் ஆகியோரின் பாசமான அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி அதனைத்தொடர்ந்து தும்பளை கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
0016 4 765 71425
077 953 9600
077 805 6865


தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

மண்ணில் 08 . 10 . 1943

விண்ணில் 07 . 01 . 2024



### வேலுப்பிள்ளை சிவநேசன்

(ஓய்வு பெற்ற ஆண் பரிசாரகர், கோட்டைக்காடு வைத்தியசாலை)

யாழ்ப்பாணம், வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், தொல்புரத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவநேசன் அவர்கள் நேற்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர்களான வைரவநாதர் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் கமலாதேவியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, குணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் கந்தசாமி மற்றும் இராஜகோபால் அமரர்களான நாகேஸ்வரி, தங்கேஸ்வரி, கிருஷ்ணராஜா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவரூபன் (கணித ஆசிரியர், தனியார் கல்வி நிறுவனம்), சிவச்செல்வன் (பௌதீகவியல் ஆசிரியர், யா/விக்ரோறியா கல்லூரி), சிவநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி, வாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், காரைநகர் பிரதேச சபை), மந்தாயினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானுஜன், சரண்ராஜ், கஜானன், யர்சிகன், சிவாதிகா, கேசிகன், விகாஷ் (அமெரிக்கா), நிதீஷ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (தொல்புரம்) நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
077 538 9756 (மகன்)
077 314 3789 (மகன்)

(CS 27607) S-1

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சாவித்திரி



மலர்வு 25.09.1963 உதிர்வு 07.01.2024

யாழ்ப்பாணம், மணல்தறை வீதி, கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சாவித்திரி அவர்கள் நேற்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அறுமுகம் மற்றும் குமுதச்சந்திரவதி தம்பதியரின் அன்பு மகளும், ஸ்ரீமுருகன் (London), கங்கா சரஸ்வதி (கனடா), கீதா, வெங்கடறமணா (விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வள்ளிநாயகி (London), ஜெயகரன் (கனடா), மலர்விழி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.11, மணல்தறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27608)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மிரண்டு காட்டிய சாதுகள்!


ஒரு நாட்டுக்கு - சமூகத்துக்கு அபிவிருத்தி என்பது தவிர்க்கப்பட முடியாததுதான். ஆனால், அந்த அபிவிருத்தியின் அடிப்படை சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்று ஜனாதிபதி ரணிலிடம் ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கின்றனர் சர்வமதத் தலைவர்கள்.

வடமாகாணத்துக்கு நான்கு நாள்கள் பயணமாக கடந்த நான்காம் திகதி வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார். இந்தத் தொடர் சந்திப்புகளின் துணைநிகழ்வாக மதத்தலைவர்களையும் அவர் நேற்றுமுன்தினம் சந்தித்தார். இதன்போதே, உண்மையான அபிவிருத்தி என்றால் என்ன? அபிவிருத்தி எப்போது அதன் இலக்கை அடைந்து கொள்ளும்? இனங்களுக்கும் - மதங்களுக்கும் - சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கம் இல்லாமல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் உண்மையில் அபிவிருத்திதானா? என்ற புரிதலை ஜனாதிபதியிடம் நேர்படச் சொல்லியிருக்கின்றார்கள் சர்வமதத் தலைவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேல், ஜனாதிபதி வரும்போது எழுந்துநின்று, கும்பிடுபோட்டு வரவேற்கும் மரபை அவர்கள்கைவிட்டிருக்கின்றனர். இருந்த இருக்கையிலிருந்து இம்மியும் நகராமல், 'பௌத்த மேலாதிக்கம்' எவ்வாறு ஜனாதிபதியை அணுகுமோ - அதே சிந்தனையின் பாற்பட்டுத்தான் 'எங்கள்' சர்வமதத் தலைவர்களின் உடல் மொழியும் அமைந்திருந்தது. எழும்பவுமில்லை குனியவுமில்லை வளையவுமில்லை வரவேற்கவுமில்லை. 'உங்கள் மீது நாங்கள் உச்சக்கட்ட அதிருப்தியில் இருக்கின்றோம்' என்று தங்களின் சொல்லாலும் -செயலாலும் ஜனாதிபதியிடம் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்திய 'கெத்துக்காக' சர்வமதத் தலைவர்களை எத்தனை பாராட்டினாலும் அது தகும்.

ஜனாதிபதி ரணிலின் வடக்குக்கான பயணம், தேர்தலுக்கான நாடிப்பிடிப்பாகத்தான் உள்ளது. அது பட்டவர்த்தனமானது. ஆதலால், மதத்தலைவர்கள் கொண்டிருக்கும் அதிருப்தியைத்தான் மக்களின் நிலைப்பாடாக அவர் கொள்ள வேண்டும். இங்கு ஏராளம் அரசியல் கட்சிகள் இருக்கலாம். அவற்றுக்கு இடையிலான கொள்கைகள் வேறுபடலாம், யாப்புகள் வெவ்வேறாக வரையறுக்கப்பட்டிருக்கலாம். கட்சிகளின் வர்ணக்கொடிகளின் கீழ் வடக்கின் சிறுபான்மை மக்கள் பிரிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், மதத்தலைவர்கள் அவ்வாறான பிரிவினைக்கு உட்பட்டவர்கள் அல்லர். சிங்களப் பேரினவாதம் கொத்துக் குண்டுகளைப்போட்டு பல்லாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்தபோது தமிழர்களுக்கு அரணாக எத்தனையோ அருட்தந்தையர்கள் நின்றிருக்கின்றார்கள், - மடிந்திருக்கின்றார்கள். அவர்களின் சாவு தனியே கத்தோலிக்கர்களுக்கானதாகவோ இந்துக்களுக்காகவோ இருக்கவில்லை. மாறாக 'அனைத்து' மக்களுக்குமானதாகவே இருந்தது. இன்று இந்துமதத் தலைவர்களும் தமிழ்த் தேசியப்பரப்பில் முழுவீச்சுடன் இயங்குவதைக் காண்கின்றோம். அவர்களின் இயங்குநிலை இந்துக்களை மையப்படுத்தியதாக இல்லை. மாறாக அனைவருக்குமானதாகவே இருக்கின்றது. ஆதலால், 'அனைவருக்குமானவர்கள்' வெளிப்படுத்திய இந்த நிலைப்பாடுதான் மக்களின் நிலைப்பாடு. அதில் மாற்றுச் சிந்தனையொன்றை கிஞ்சித்தேனும் ரணில் ஏற்படுத்துவாரெனில், அது தேர்தலில் தனக்குத்தானே வெட்டிக்கொள்ளும் குழிபோன்றதே.

பௌத்த பேரினவாதத்தின் கோரப்பற்கள் இக்காலத்தில் அனுதினம் தமிழர் தாயகத்தையும் தமிழ்த் தேசியத்தையும் இரையாக்கிக் கொண்டிருக்கின்றது. மக்கள் வாழ்வதற்கு அச்சப்படுகின்றனர். இந்தச்சூழமைவில் வடக்கு மாகாணத்திலிருந்து இந்தியாவுக்கு மின்சாரம் விற்கப்படுவதை தமிழர்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக, சிறுபான்மை இனங்களைஉச்சபட்சசகிப்புத்தன்மையுடன்அணுகக்கூடிய, ஒருதாய் மக்களாக இலங்கையர்கள் வாழக்கூடிய ஏதுநிலைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழர்களின் முதல்கட்ட வேணவாவாக இருக்கின்றது. எம் 'மெய்க்காப்பாளர்களான' மதத் தலைவர்கள் வெளிப்படுத்திய கருத்தும் அதுவே.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு அடுத்தவாரம் நாடாளுமன்றத்துக்கு

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.8**

**திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு எதிர்வரும் வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இல்லாத பல விடயங்கள் புதிய சட்டவரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. புதிய சட்டவரைவில், தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்படவில்லை. அந்த அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சந்தேகநபரை தடுத்துவைக்கக்கூடிய ஏற்பாடுகள் தற்போது 30 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சுவாசநோய் மருந்துக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 8

அரச மருத்துவமனைகளில் சுவாச நோய்களுக்குத் தேவையான பெரும்பாலான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் நோயாளர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# அரசியலில் சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மறைந்த பண்டாரநாயக்கவின் நினைவேந்தல் நிகழ்வில் அவர் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-இ)

## ஜனாதிபதிக்கு எதிர்ப்பு: ஐ.ம.சக்திக்கு மறுப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். இதையடுத்து போராட வந்தவர்களில் ஒருவர் மட்டும் ஜனாதிபதியிடம் மனுவைக் கையளிப்பதற்காக அனுமதிக்கப்பட்டார். (ம-20)

# எதிர்வரும் ஏப்ரலில் தேசிய அரசாங்கம்?

கொழும்பு, ஜன.8

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இடைக்கால தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாத முற்பகுதியில் இந்தத் தேசிய அரசாங்கம் அமையவுள்ளது என்றும், அதற்கு முன்னர் தேசிய அரசாங்கம் தொடர்பான விசேட அழைப்பை ஜனாதிபதி விடுப்பார் என்றும் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 9ஆம் திகதி கூடிய பின்னர் அந்தக் கூட்டத்தொடர் ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்படவுள்ளது எனவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

## நாளை

09.01.2024

**செவ்வாய்க்கிழமை**

**மார்கழி 24**

சுபநேரம் : 11.02 - 12.32

ராகுகாலம் : 03.32 - 05.02

பிரதோஷ விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**ஒரு நெருக்கடியில் நீங்கள் எவ்வளவு சிறப்பாக செயற்படுகிறீர்கள் என்பதே தலைமையின் உண்மையான சோதனை!**

**- பிரையன் டிரேசி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## விருச்சிகம்

ஆன்மீகம் முதல் அறிவியல் வரை அனைத்தையும் அறிந்து வைத்திருக்கும் நீங்கள், நியாயத்தின் பக்கம் நிற்பவர்கள். மென்மையும், விட்டுக்கொடுக்கும் மனமும், எல்லோருக்கும் உதவும் குணமும் கொண்ட நீங்கள்,....

உங்களுக்கு 10ஆவது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பதவி கிடைக்கும். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு எதிர்பார்த்ததுபோல வேலை அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். குருபகவான் 30.4.2024 வரை உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் மறைந்திருப்பதால் சில நேரங்களில் வீண் பதற்றம், மனஉளைச்சல், வேலைச்சுமை, வீண்பழி, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். மறைமுக எதிரிகளை இனம் கண்டறிவீர்கள். எதிரிகளில் சிலர் நண்பர்களாவார்கள். உள்மனதில் ஒருவித போராட்டம் எழும்பும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டிவரும். உறவினர்கள், நண்பர்களுடன் அதிக உரிமையுடன் பேசி பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

குருபகவான் 1.5.2024 முதல் 7ஆம் வீட்டில் அமர்வதால் திடீர்த் திருப்பங்கள் உண்டாகும். சோர்ந்துக் கிடந்த நீங்கள் உற்சாகமாவீர்கள். எதிலும் ஆர்வம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முழுமையடையும். வீட்டில் தாமதமான சுப நிகழ்ச்சிகள் இனி கோலாகலமாக நடக்கும். செலவுகளைக் குறைத்து இனி சேமிக்கத் தொடங்குவீர்கள்.
பூர்வீகச் சொத்திலிருந்த பிரச்சினை தீரும். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். நினைத்திருந்த வடிவமைப்பில் ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

இந்த வருடம் முடிய ராகுபகவான் 5ஆம் வீட்டிலும், கேது 11ஆம் வீட்டிலும் தொடர்வார்கள். ராகுவால் கனவுத் தொல்லை, பிள்ளைகள் விடயத்தில் அலைச்சல் வந்து செல்லும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கேதுவால் திடீர் யோகங்களும், பணவரவும் உண்டாகும். இந்தாண்டு முழுவதும் சனிபகவான் உங்கள் சுகஸ்தானமான 4ஆம் வீட்டிலேயே தொடர்வதால் இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வாகனம் அடிக்கடி பழுதாகும். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். தாயாருக்கு சிறுசிறு விபத்துகள் வந்து நீங்கும். தாய்வழி சொத்தை விற்று புதுச் சொத்து வாங்குவீர்கள். யாருக்கும் பிணைக்கு கையெழுத்திட வேண்டாம். வேற்றுமதத்தினர் உதவுவார்கள். இலவசமாக அறிமுகமாகும் கெட்டபழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடாதீர்கள்.

**வியாபாரிகளே!** சந்தை நிலைவரம் அறிந்து புது முதலீடு செய்வது நல்லது. முன்பின் அனுபவம் இல்லாத துறையில் மற்றவர்களை நம்பி கைப்பொருளை இழக்கவேண்டாம். கொடுக்கல் வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும்.

**உத்தியோகஸ்தர்களே!** எதற்கெடுத்தாலும் உங்களைக் குறை சொல்லுவதற்கென்றே இருந்த கூட்டம் காணாமற் போகும். இனி உங்களின் மதிப்பு மரியாதை கூடும். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் புது வாய்ப்புகள் வரும். சம்பள பாக்கியும் கைக்கு வரும். ஏப்ரல் மாதத்தில் அயல்நாட்டு நிறுவனங்கள் அழைக்கும். இந்தாண்டு முழுவதும் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருக்கும். செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் உயரதிகாரிகளின் இராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள்.

**இந்தப் புத்தாண்டு திட்டமிட்டு செயற்பட வைப்பதுடன், சிக்கனத்தையும் கடைப்பிடிக்க வைப்பதாக அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்கவேண்டாம். கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள். கூடுதலாக இலாபம் கிடைக்கும். சிரமங்கள் அறவே நீங்கும்.

**இடபம்:** உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப்பேச்சு வெற்றியடையும். நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**சிம்மம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். புது அனுபவம் உண்டாகும். புதுவேலை கிடைக்கும்.

**கன்னி:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்றுமுறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண்கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச்சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளைத் தவிர்ப்பீர்கள். ஒத்துழைப்பின்மையால் இலாபம் குறையும்.

**தனுசு:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சிகள் செய்வீர்கள்.

**மகரம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பக்கபலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புகழ் கௌரவம் கூடும் நாள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்:** அனுபவப்பூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் நீங்கும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவார்கள். மற்றவர்கள் பயனடைவார்கள்.

**மீனம்:** மனப்போர் நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

## நிர்வாகசபைத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 8
கல்வியங்காடு கிராம அபிவிருத்திச் சங்க நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.
இதில் தலைவராக தி.பன்னீர்ச்செல்வம், செயலாளராக சி.விஜயகுருராஜா, பொருளாளராக ச.உமாசுதன், உபதலைவராக மா.கருணாமூர்த்தி, உபசெயலாளராக த. ஜெயசீலன் உள்ளடங்கலாக நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ச)

## கீரிச்சூடை மீன்கள் அதிகளவு பிடிபாடு

யாழ்ப்பாணம், ஜன. 8
பாஷையூர் கடலில் மீனவர்கள் வலையில் பெருமளவான கீரிச்சூடை மீன்கள் பிடிபடுகின்றன என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்தக் கீரிச்சூடை மீன்கள் கிலோ 300 ரூபா முதல் 400ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.
அத்துடன் அதிகளவான கீரிச் சூடை மீன்கள் தென்பகுதிக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (ச-17)

## மேரிபஸ்ரியன் அடிகளாரின் 39 ஆம் நினைவு மன்னாரில்!

யாழ்ப்பாணம், ஜன. 8
நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்து,
உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்து, பல்வேறு மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வந்த அருட்தந்தை மேரிபஸ்ரியன் அடிகளாரின் 39ஆவது நினைவேந்தல் நிகழ்வு மன்னாரில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.
1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி மேரிபஸ்ரியன் அடிகளார் சில பொதுமக்களுடன் சேர்த்துக் கொல்லப்பட்டார்.
அரசபடைகளால் அவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படும் நிலையில், இந்தப் படுகொலைகளுக்கு நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாகவே உள்ளது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் 39ஆவது ஆண்டு நினைவுநாளே வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (ம-56)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 07 . 1937



மறைவு 04 . 01 . 2024

## புவனேஸ்வரி பரராஜசிங்கம்

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வாழ்விடமாகவும், கனடா Scarborough ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் கடந்த (04.01.2024) வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கிளாக்கர்) நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற Railway Head Guard) அவர்களின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி (ஞானம் - கனடா), வரதராஜா (வரதன் - பிரான்ஸ்) அகியோரின் அன்புச் சகோதரியும், யசோதரன் (ராசன் - பிரான்ஸ்), யசோதா (பவா - கனடா), யசோக்குமார் (குமார் - பிரான்ஸ்), வசந்தகுமார் (வசந்தன் - டென்மார்க்), சுரேஸ்குமார் (சுரேஸ் - ஜேர்மனி). ரமேஸ்குமார் (ரமேஸ் - பிரான்ஸ்), கணேஸ்குமார் (கணேஸ் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலா, காலஞ்சென்ற கங்காதரன், கிரிஜா, சுதா, சந்திரா, விஜி, றஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் சந்திரசேகரம் (அவுஸ்ரேலியா). காலஞ் சென்றவர்களான கோபாலசிங்கம், விஜயானந்தன் மற்றும் கௌரிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், யசிந்தா - சஞ்ஜீவ், நிரோஷ், அஜித் -மோனிக், சுபன், வனிதா - ஜொகான், சிவேத், நிவேதா - அன்சன், கீர்த்திகா, திவ்யா - சரத்ஹான்த், ராகுல், சஞ்சா, சஜீவன், நிசாந்த், நிலா, சபீனா, யசிக்கா, பரிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டேமியன், ஷனல், சிலியாஸ், லாணா, சாஞ்ஜே, ரறோசெய்ன், எர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.01.2024) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:
கணேஸ் - மகன்
Mobile : +141 638 89478
பவா - மகள்
Mobile : +141 626 25121
Phone : +141 675 44715
சுபன் - பேரன்
Mobile : +164 798 25121

(cs.53412) (N.1)

# கண்ணீர் அஞ்சலி

யாழ் / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில்
ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி பாமினி மதுராந்தகன்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
**பரமேஸ்வரி இராசரத்தினம்**



அவர்கள் கடந்த (05.01.2024) வெள்ளிக் கிழமை காலமானதையிட்டு அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

# யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்

## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

- காலம் - 21.01.2024 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - முற்பகல் 10.00 மணி
- இடம் - வித்தியாலய "ஜோன்பிள்ளை மண்டபம்"

அனைத்து பழைய மாணவர்களும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா / புனித சாள்ஸ் ம.வி.

(cscs 53446)

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1939



மறைவு 07 . 01 . 2024

## முருகன் வைரவன்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்படமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் வைரவன் அவர்கள் நேற்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் இந்திரானியின் பாசமிகு கணவரும், போதகர் நித்தியானந்தன் (சியோன் தேவாலயம் - மானிப்பாய்), நவீந்திரராசா, ஜெகதீஸ்வரி, சசிலன், பரமேஸ்வரி, தருமராசா, ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமறானி, ரஞ்சினி, ராகவன், கார்ஜிகா, ஜெகநாதன், தர்சினி, ஆகியோரின் அன்பு மாமனாரும், சாமுவேல்சாம், எஸ்தர், சலோமி, ஹனா, மிசாக், திசான், டிசான், கிறிஸ்ரினா, யோனகா, யேனச்சா, யோன் ஜெஸ்மியா, எலிசா, கெத்துராள், செனா, செரோன், சேமா, பிறிஸ்கா, ஓனேசிம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.01.2024) திங்கட் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி.
168, பால்பண்ணை வீதி.

தகவல்:
போதகர் நித்தியானந்தன்
077 497 5260

## வீதிப் புனரமைப்பு மீள ஆரம்பமாகும் ஜனாதிபதி வாக்குறுதி

யாழ்., ஜன. 8

யாழ். மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்ட வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் வெகுவிரைவில் ஆரம்பமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கூட்டத் தில் முடிவு எட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், யாழ்ப்பாணத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ம-125)

## குளத்தை விடுவிக்க கோரிக்கை

கரைதுறைப்பற்று நித்தகைக் குளக் காணிகளை விடுவித்து விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். நித்தகைக் குளத்தின் பெருமளவு காணி வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளது. அந்தக் காணியை விடுவிக்கும்படியே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மயிலத்தமடு மாதவனையில் பொலிஸார் திடீர் விசாரணை!

**மட்டக்களப்பு, ஜன. 8**

**மயிலத்தமடு மாதவனையிலுள்ள தமிழ்ப் பண்ணையாளர்களிடம் திடீர் விசாரணை மேற்கொண்டுள்ள பொலிஸார் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

பண்ணையாளர்களது வாடிகளுக்கு கடந்த வியாழக்கிழமை சென்று கால்நடைகளின் விவரம் மற்றும் அவர்களது பெயர் விவரத்தையும் பொலிஸார் கோரியுள்ளனர்.

அத்துமீறிய குடியேற்றவாசிகளால் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளும் இடங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடாமல் பார்த்துக் கொள்ளுமாறும் இரவில் கால்நடைகளை அடைக்குமாறும் வற்புறுத்திச் சென்றதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-100)



விஜயகாந்தின் மறைவுக்கு வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் குருகுலம் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது. (ரி-100)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மகான் ஶ்ரீரமணமகரிஷியின் 144 ஆவது ஜனன தின நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சைவப்புலவர் செ.பரமேஸ்வரன், ஆசிரியர் துரை கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (ரி-66)

## பழுதடைந்த விதை உ.கி. பின்னணியில் சதித்திட்டம்

### யாழ். விவசாயிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளின் பின்னணியில் சதி நடவடிக்கைகள் இருக்கலாம் என்று யாழ்ப்பாண மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகாரசபைத் தலைவர் கந்தையா தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 வருடங்களாக உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்ள முடியாது போயுள்ளது. அதாவது கொரோனா மற்றும் சேதன உரத்தட்டுப்பாடு காரணமாக உருளைக்கிழங்குச் செய்கை பாதிக்கப்பட்டது. இவ்வருடம் உருளைக்கிழங்குச் செய்கைக்காகக் கொண்டுவரப்பட்ட விதை உருளைக்கிழங்குகள் பக்றீரியாத் தாக்கத்தால் அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆறு மாதங்களாக விவசாய நடவடிக்கைக்காகத் தயாராகி வந்த நிலையில் தற்போது திடீரென விதை உருளைக்கிழங்கு இல்லை என்று தெரிவித்தமையால் விவசாயிகள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ம-27)

## முதலாம் ஆண்டு நினைவும், திதிக்கிருத்திய அழைப்பும்

### திருமதி பங்கயச்செல்வி வடிவேல் (பேபி)

(முன்னாள் பாலபண்டிதர். யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவி)

MRS - PANKAYACHELVI VADIVEL ( BABY)

(Former Bala Pandit & Old student of vaidyeshwara college)



**திதி: 08.01.2024 திங்கட்கிழமை**

"நாட்களும் வருடமாய் மெல்லவே நகர்ந்திடினும்
நாம் இருவரின் தொப்புள்கொடி பந்தமும் ஸ்பரிசமும்- இம்மேதினியில்
என்னுயிர் துறக்கும் வரை இனிய
நும்முகமும் அரவணைப்பும்
என் அகத்தை விட்டு ஒருபோதுமகலாது அம்மா ....."

யாழ்.வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், மட்டு. கோட்டைக்கல்லாற்று மலைமாரி செல்விவேல் வாசத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட என்னுயிரினும் மேலான அன்னை ஆகிய ஆருயிர் அன்புத் தெய்வம், குடும்ப வழிகாட்டி

அவர்களின் முதலாம் வருட பூர்த்தித் திதிநாள் கிருத்திய நிகழ்வுகள் இன்று 08-01-2024 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா ஈடேறப் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை வாஞ்சையுடன் அழைக்கின்றேன்.

**பிரிவால் துயருறும்**
**பாசமிகு மகன் செந்தா.**
(திரு - வடிவேல் செந்தூர்வடிவேல்) 077 6155387 , 075 4257616 , 075 4675387.

## என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்

17 ஆம் ஆண்டு நினைவலைகள் 12 ஆம் ஆண்டு நினைவலைகள்




**அமரர் செல்லையா வீரசிங்கம்**

**திருமதி வீரசிங்கம் இராசமணி**

ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி
வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதருள்
மாணிக்கமான புனித ஆத்மாக்களின் நினைவாக !!
இன்றைக்கும், என்றைக்கும் நீங்கள் எங்களின் நெஞ்சங்களில்
வாழ்ந்துகொண்டே இருப்பீர்கள் !
உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல எம்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் நமசிவாய!
சிவாய நம ஓம் !!!
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!
ஓம் நமசிவாயம்

**குடும்பத்தினர்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



**செல்வதுரை சொர்ணலிங்கம்**

சுதுமலையை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வதுரை சொர்ணலிங்கம் அவர்கள் ஜனவரி 6 அன்று காலமானார்.

இவர் திருமதி சுகேந்திரா சொர்ணலிங்கம் அவர்களின் அன்புக் கணவரும், காலம் சென்ற திரு. திருமதி செல்வதுரை அவர்களின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான திரு. திருமதி முத்துராஜா ஆகியோரது மருமகனும், திரு. விக்னேஸ்வரன் மற்றும் காலஞ்சென்ற திரு. சிவகுமாரன் ஆகியோரது சகோதரரும், ஆதர்வாமனன் மற்றும் அன்றூ வாகீசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரது தந்தையும், ரோஷிகா மற்றும் அனிதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் திருவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (ஜனவரி 8) காலை 8.30 மணிமுதல் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 11:30 மணிக்கு ஈமக்கிரியை நடைபெற்று பிற்பகல் 2:00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தகவல்**
**வாகீசன் - 0772845700 மகன்**

## விஜயகாந்த் வழியில் ஈழத் தமிழருக்காக தே.மு.தி.க. நிற்கும்

சென்னை, ஜன. 8

புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் வழியில் தேசிய திராவிட முற்போக்குக் கழகம் ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கும் அவர்களது சுதந்திர வாழ்க்கைக்கும் துணை நிற்கும் என அக்கட்சியின் பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

'புரட்சிக் கலைஞர்' விஜயகாந்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவின் பெயரில் வெளியிடப்பட்ட இரங்கல் அறிக்கை விஜயகாந்தின் மனைவியும் தே.மு.தி.க. பொதுச் செயலருமான பிரேமலதா விஜயகாந்திடம் கையளிக்கப்பட்ட போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் நிறைவில் கடந்த காலங்களில் 'புரட்சிக் கலைஞர்' எவ்வாறு தமிழீழ மக்களின் போராட்டத்துக்கும் அவர்களுடைய சுதந்திர வாழ்க்கைக்கும் துணை நின்றாரோ, அதேபோன்று எதிர்காலங்களிலும் தொடர்ந்து தேசிய திராவிட முற்போக்குக் கழகம் செயற்படும் என்று அதன் பொதுச்செயலர் பிரேமலதா மிகவும் உணர்வு பூர்வமாகவும் உறுதியாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் மிகப்பெரிய வர்த்தக கண்காட்சி
THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

JITF 2024
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்

ORGANIZED BY
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH
CCIY CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YALPANAM
UNITY IS STRENGTH

PLATINUM SPONSOR
DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS
ADRIAN SOLAR GREEN
NIPPON CEMENT

SILVER SPONSORS
Anchor
Hayleys Solar
Rumuna
4ever
Darley Butler
Elephant House
KEELLS KREST
PHOENIX
RHINO
Sera

OFFICIAL SPONSORS
PRINT MEDIA உதயன்
TELEVISION Capital
RADIO
DIGITAL MEDIA காலைக்கதிர்
CITY HOTEL

www.jitf.lk jitf.lk

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com

# வீட்டின் மீது தாக்குதல்

சங்குவேலி தெற்கில் வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத சிலர் வீட்டின் ஜன்னல்களை சேதப்படுத்திவிட்டு, வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்து எரித்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர். மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-27)

# 6 பிப்பால் பெண் சாவு!

ய ப்பாணம், ஜன. 8

த றென வலிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண்ணொருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ராசா விஜயராணி (வயது- 63) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தாயாவார். மூளையில் குருதிக் கட்டி உறைந்ததே அவரது உயிரிழப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-27)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில்
க. பொ.த. சாதாரணதர பரீட்சையில் (2022) சித்தியடைந்து
எம் மண்ணிற்கு பெருமை தேடித்தந்த




சு.சுலக்ஷன் 9A

- க.சஜிதா 8A, B
- க.சஜிதன் 8A, C
- பி.அனுசன் 5A, 2B, 2C
- அ.அபிநயன் 2A, 2B, 3C, S
- சு. தன்சை A, 4B, 3C, S
- சி. சிவகௌரி A, 3B, 3C, S
- பா. தனுசயன் A, 2B, 2C, 3S
- அ. நிசான் A, 6C, S
- செ. சகிதா 2B, 3C, S
- ந.ஜனனி 4C, 3S

ஆகியோரை பாராட்டுவதுடன் இவர்களுக்கு கற்பித்த
ஆசிரியர்களையும் வழிகாட்டிய அதிபர் அவர்களையும்
பாராட்டி வாழ்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வள்ளுவன் சனசமூக நிலையம்
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.



## மடு மாதாவின்...

தளங்களுக்கு நேற்று முதல் கொண்டு செல்லப்படுகின்றது.


இதற்கமைய முதல் நாளான நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை மன்னார் ாலயத்துக்கு மாதா அழைத்து வரப் ாள்.

ஊப் பவனிகளுடன் மன்னார் தீவுக் ா திருச் சொரூபம் வருகை தந்ததும் னார் ஆயர் உட்பட மதகுருக்கள் ாது மக்கள் எனப் பலரும் வரவேற்ற னர்.

ஆயரால் செபமாலை வடிவம் கொண்ட பலூனும் சமாதானப் புறாவும் பறக்கவிடப்பட்டன. இதன் ஞாபகார்த்தமாக மன்னார் நகர் மத்தியில் அமைந்துள்ள மருதமடு வளாகத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் ஞாபகச் சின்னம் ஆயரால் திறந்து வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மன்னார் பேராலயத்தில் பேராலய பரிபாலகர் அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளால் தலைமையில் உதவிப் பங்கு தந்தையுடன் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் இன்று காலை 8 மணி வரை பக்தர்களின் வழிபாட்டுக்காக ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் 25 முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கு திருமதி மனோகரிதேவி மகாதேவனின் ஓராண்டு நிறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினரால் கற்றல் உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ரி-9)




தேசிய மட்டத்தில் நடைபெற்ற நாடகப் போட்டியில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி வெற்றியீட்டியதுடன் விருதுகளையும் பெற்றுச் சாதனை படைத்தது. கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெற்ற போட்டியில் "உறைந்த புலரி" எனும் நாடகமானது இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன், நாடகத் துறைசார் 11 விரு துகளையும் பெற்றுக்கொண்டது. (ரி-27)



கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற் சியின் ஒரு பகுதியாக நேர முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ ஆளுமை தொடர்பான கலந் துரையாடல் பாடசாலை பிரதி அதிபர் பா.மதனரூபன் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. கலந்துரை யாடலில் வளவாளராக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி சங்கவி கலந்து கொண் டார். (ரி-159)



சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத் தின் சிறுவர் தினமும், மூத் தோர் கௌரவிப் பு நிகழ்வும் அண்மையில் சுன்னாகம் கிழக்கு சொர்ண வரத பத்திரகாளி யம்பாள் ஆலயத் தில் இடம்பெற் றது. (ச-66)



இராணுவத்தின் 54 ஆவது காலாட்படையின் ஏற்பாட்டில் நத்தார் கரோல் விழா 54 வது காலாட் படைப் பிரிவு பொதுக் கட்டளை அதிபதி மேஜர் ஜெனரல் பிரதீப் குலதுங்க தலைமையில் மன்னார் தோட்டவெளி வேதசாட்களின் ஆலய வளாகத்தில் கடந்த புதன்கி ழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை முதன்மை விருந்தினராகவும், வன்னி பிராந்தியப் பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் டினேஸ் நாணயக்கார பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ரி-60)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் வருடாந்த திரு வாசக முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண் டபத்தில் கடந்த புதன்கிழமை காலை 7.45 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது. (ரி-66)



ஊர்காவற்றுறைப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு வாழ்வாதா ரத்தை மேம்படுத்துவதற்கான உதவிப் பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை செயலாளர் மற்றும் உத்தி யோகத்தர்களால் வழங்கப்பட்டன. சபையின் நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள், சமை யல் பாத்திரங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன வழங்கப்பட்டன. (ரி-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்களுக்கும் ஜனாதிபதி ரணிலுக்கும் இடையிலான சந்திப்பொன்று தனியார் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்;

வடமாகாணப் பிரச்சினைகளில் காணிப் பிரச்சினை மற்றும் காணாமற்போனோர் பிரச்சினை என்பன முதன்மைப்படுத்தப்பட்டிருந்தன. அரசாங்கம் என்ற வகையில், அந்தப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் வடக்கின் காணிப் பிரச்சினை மற்றும் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கிறோம். இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடுகளை வழங்கும் வேலையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வடமாகாணத்தில் காற்றாலை மற்றும் சூரியசக்தி என்பவற்றைப் பயன்படுத்தி ஏற்றுமதிக்கான வலுசக்தி உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் வளமான விவசாய நிலங்களில் நவீன தொழில்நுட்பத்தைச் சேர்த்து ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த தசாப்தத்தில் உலக மக்கள் தொகை இரட்டிப்பாகும் நிலையில், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி விவசாயத்தை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நல்லூர்த் திருவிழாவை உலக இந்து பக்தர்களும் காணும் வாய்ப்பை வழங்கும் வகையில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் ஓகஸ்ட் மாதம் எசல பெரஹெர மற்றும் கதிர்காமம் பெரஹெர, யாழ். நல்லூர்த் திருவிழா ஆகியவற்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

வடக்கில் சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தியில் புதிய முதலீட்டு வாய்ப்புகளுக்கான வாய்ப்புகளை புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான புதிய பொருளாதார மறுசீரமைப்புகளால் வட மாகாணத்தில் புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் உருவாகும். இதனால் வடபகுதி இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தமுடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முடிவுகள் பிரபலமானவையாக இல்லாதிருக்கலாம். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக எந்தவொரு பிரபலமற்ற முடிவையும் எடுப்பேன். நாம் அனைவரும் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்து நாட்டை அபிவிருத்தி செய்வோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ-ஒ-இ)

## வடக்கில்...

வடமாகாணத்துக்கான நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் யாழ். சிவில் சமூக நிலையத்தின் தலைவர் என்று தன்னை அடையாளப்படுத்தும் அருண் சித்தார்த்துக்கும் (இவர் கடந்த காலங்களில் தன்னை வன்முறைக் கும்பலைச் சேர்ந்த ஒருவராக இனங்காட்டி தென்னிலங்கை ஊடகங்களில் நேர்காணல் வழங்கியவர்) இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்;

வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்பட்டாலும் சாதிப் பிரச்சினையால் மக்கள் அவதிப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தை தவிர்த்து கொழும்பில் வாழும் அரசியல்வாதிகள் இந்தப்பிரச்சினை குறித்து குரல் எழுப்பாதது வேதனைக்குரியது எனவும் அருண் சித்தார்த் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் பல சாதிப் பாடசாலைகள் இருப்பதாகவும் அவற்றுக்கு அடிப்படை வசதிகள் கூடக் கிடையாது என்றும் சுட்டிக்காட்டிய அருண் சித்தார்த், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார். அவ்வாறான 100 பாடசாலைகளின் பெயர்களை முன்வைக்குமாறும் அந்த 100 பாடசாலைகள் உடனடியாக அபிவிருத்தி செய்யப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

சாதிப் பிரச்சினைகளுக்காக மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காத பிரதேச செயலகங்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் என்று கூறி சங்கங்களை அமைத்துள்ள காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் இருப்பதாக அருண் சித்தார்த், இந்தச்சந்திப்பின் போது தெரிவித்தார். காணாமல் போனோர் சங்கங்களைச் சேர்ந்த எவருடனும் விவாதத்துக்குத் தயாராக இருப்பதாகவும், அவர்கள் காணாமல் போனவர்கள் எனக் கூறி வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் சித்தார்த் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கும் ஆனால் கவனத்தில் கொள்ளப்படாத பல பிரச்சினைகள் என்று குறிப்பிட்ட ஒரு கடிதமும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (அ-ஒ-இ)

## இந்திய...

எமது கடலில் அத்துமீறும் இந்திய மீனவர்களையே இவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இவர்கள் எப்படி கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்துவார்கள்? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாசச் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குமாகாணத்தில் உள்ள முல்லைத்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை சமாசங்கள் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஒரு கட்சி சார்பில் அழைக்கப்பட்டவர்களுடன் மட்டும் சந்திப்பை மேற்கொண்டதன் மூலம் அவர் ஒரு கட்சிக்கான ஜனாதிபதியா? இல்லை கட்சி சார்பானவர்களுக்கான ஜனாதிபதியா என்ற கேள்வியையும் எழுப்புகின்றோம்.

இதுவரை காலமும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் கடற்றொழில் அமைச்சராக இருந்தபோதெல்லாம் வடக்கில் உள்ள மீனவர்களது பிரச்சினைகளையும் உண்மை நிலைமைகளையும் தெளிவாக வெளிகொண்டு வருவதற்கு சந்தர்ப்பங்களை உருவாக்கியிருந்தார்கள். ஆனால், ஒரு தமிழர் கடற்றொழில் அமைச்சராக இருந்துகொண்டு கடற்றொழிலாளர்களைப் பிளவுபடுத்தி அரசியல் உள்நோக்கத்துடன் வழிநடத்துவது வடக்குக் கடற்றொழில் சமூகத்தினராகிய எமக்கு மிகுந்த வேதனையையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்குக் கடற்றொழிலாளர்களது பிரச்சினை கடற்றொழில் அமைச்சர் சார்ந்த கட்சி சார்ந்த பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இந்நிலை தொடருமாக இருந்தால் எதிர்காலத்தில் பிரச்சினை வீரியமடையும். அமைச்சர் சார்ந்த கட்சியினர் சுட்டுக் கொன்றாலும் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகளைத் தொடர்ந்து பேசுவோம் - என்றார். (அ-ஒ-100)

## மருந்தகத்திலிருந்து...

உயிர்கொல்லிப் போதை மாத்திரையாகப் பயன்படுத்தப்படும் வலி நிவாரண மாத்திரைகள் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் போதைப் பாவனையாளர்களை இலக்குவைத்து உயிர்கொல்லிப் போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் கும்பலைக் கைது செய்யும் நோக்குடன் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசேட சுற்றிவளைப்பு நேற்று மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் வழிகாட்டலில் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பெ.மேனன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் யாழ். நகர்ப் பகுதியில் உயிர்கொல்லி போதை மாத்திரையை விற்பனை செய்த சந்தேகத்தில் 2 பேரைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து ஆயிரத்து 100 உயிர்கொல்லிப் போதை மாத்திரைகளை மீட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாகவுள்ள மருந்தகத்தில் பணிபுரிவதாக கைதான சந்தேகநபர் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து சந்தேகநபர் குறித்த மருந்தகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 200 உயிர்கொல்லி போதை மாத்திரைகளாகப் பயன்படுத்தக்கூடிய வலி நிவாரண மாத்திரைகளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (அ-ஒ-23-26)

## கிணற்றுக்குள்...



கடந்த மழை வெள்ளத்தால் குறித்த கிணறு வெள்ளநீரில் நிரம்பியிருந்தது. இதனால் கிணற்றைச் சுத்தம் செய்வதற்காக நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு இறைத்துள்ளார்கள். அப்போது கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் கலந்திருப்பது கண்டறியப்பபட்டது.

'கிணற்றைச் சுத்தம் செய்யும்போது முதலில் கருநிறத்தில் நீர் காணப்பட்டது. பின்னர் மண்ணெண்ணெய் மணக்கத் தொடங்கியது. கிணற்று நீரின் மேற்படலம் மண்ணெண்ணெயாக உள்ளது. வாளியால் தண்ணீரை அள்ளி அதில் ஒரு இலையை நனைத்து அதனைப் பற்றவைத்தபோது அந்த இலை எரிந்தது' என்று அந்தக் கிணற்றின் உரிமையாளர் தெரிவித்தார்.

கிணற்றுக்கு அருகில் தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் அவர்களின் முகாம் இருந்ததாகவும் அந்தக் காலத்தில் நிலத்தில் புதைக்கப்பட்ட மண்ணெண்ணெயே கசிந்து கிணற்று நீரோடு கலந்திருக்கலாம் எனவும் ஊரவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-19)

## ஒவ்வொரு...

கிருபானந்த குருக்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வமதத் தலைவர்களுடனான சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

ஆனால், இதனை ரணில் பெரிதாகக் கணக்கெடுக்கவில்லை. மாறாக, 'அனைத்து மதம் தொடர்பிலும் செயற்பட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது குறித்து ஆலோசிக்கின்றேன்' என்று இதற்கு ஜனாதிபதி ரணில் பதிலளித்துள்ளார். (அ-ஒ-125)

## சரசாலைக்...

லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சரசாலையில் வனவளத் திணைக்களத்தின் பிடியில் ஒரு தொகுதிக் காணிகள் உள்ளன. அவற்றுக்குள் மக்களின் விவசாய நிலங்களும் உள்ளடங்குகின்றன. அவற்றை விடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சரசாலையில் அமைந்துள்ள காடுமற்றும் அதனோடு இணைந்த பகுதியை சுற்றுலாவுக்குரிய வகையில் மேம்படுத்த முடியும். எனவே அந்தக் காணிகளை விடுவிக்கத்தான் வேண்டுமா என்பதை ஒன்றுக்கு இரண்டு தடவை மீள் ஆலோசனை செய்யுங்கள் - என்றார். (அ-ஒ-5)

## அடிக்கல்லா?...

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், '2019 ஆம் ஆண்டு நீங்கள் (ரணில்) பிரதமராக இருந்தபோது சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கேட்போர் கூடத்துக்கு அடிக்கல் நடுகை செய்தீர்கள். அந்தக் கட்டடத்துக்கு நிதி ஒதுக்கப்படாமையால் அது இன்னமும் கட்டி முடிக்கப்படவில்லை. அதற்கு நிதி ஒதுக்குங்கள்' என்று கோரிக்கை முன்வைத்தார். அதற்குச் சிரித்துக்கொண்டு பதிலளித்த ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, அடிக்கல்லுக்கு மேல் நினைவுக்கல்லைத் திறந்து வையுங்கள் என்று குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## போதைக்கு...

மானிப்பாயில் உயிர்கொல்லிப் போதைக்கு அடிமையான 24 மற்றும் 25 வயதான இருவரைக் கைது செய்து சட்ட மருத்துவ அதிகாரி மூலம் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் நீதிவான் கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டதற்கு அமைய அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-125)

## விசேட விமானத்தில்...

யின் விசேட விமானத்தில் கொழும்பு நோக்கி நேற்று மதியம் பயணமானார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வடக்குக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ். நகரிலுள்ள நட்சத்திரவிடுதியில் தங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவுக்கு மேலதிகமாக 600 பொலிஸாரும், 150 பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும், இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ்ப்பாண இந்தியத் தூநரகத்தின் இணைந்த ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட சிறிய நடுத்தர சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும், விற்பனையும் யாழ்ப்பாண இந்திய கலாசார முன்றிலில் யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ப.ஜெயசேகரம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இதில் 130 உள்ளூர் சிறிய நடுத்தர சுயதொழிலாளர்களின் உற்பத்திப் பொருள்களின் காட்சிக்கூடங்கள் காட்சிப் படுத்தப்பட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

(ம-27)

# நூல் வெளியீடு

யாழ்., ஜன. 8

ஜீவநதி ஏற்பாட்டில் மலரன்னையின் அமுத விழவும் 'மலரன்னையின் வாழ்வும் படைப்பும்' நூல் வெளியீடும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் (சரஸ்வதி மண்டபம்) மண்டபத்தில் கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

(ஒ-159)


## கட்டட ஒப்பந்த விலைமனுக்கோரல்

உடுப்பிட்டி இலகடி. வல்வெட்டி பராசக்தி அம்மன் ஆலய மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம் மற்றும் சபை அத்தோடு பிள்ளையார் முருகன் கட்டிட நிர்மாண வேலைகளுக்கு கட்டட ஒப்பந்ததாரர் விலை மனு கோருகின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 340 6266, 077 551 2509
077 694 9243

குறிப்பு: (ஒரு வாரத்துக்குள்) (CR 41473) S-1

## வேலையாள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள பலசரக்கு கடைக்கு முன் அனுபவமுள்ள வேலையாள் தேவை.

077 112 3542

## வாகனம் விற்பனைக்கு

உற்பத்தி வருடம் 2014 வடிவகை வாகனம் அலுமினிய Body யுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 886 9583

## தேவை

வாணிஸ் வேலை. காப்பன்ரர் வேலை பன்றிக் கபெட் வேலைக்கு ஆட்கள் தேவை.

நிரந்தர வேலை (யாழ்ப்பாணம்.)

தொடர்புகளுக்கு: 076 8219 414

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0777 222 262

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(1). **வரவேற்பாளர்** (Receptionist) **பகல்/ இரவு**
(2). **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்** (Marketing Staff)
(3). **பண வசூலிப்பாளர்** (Cash Collector)
(4). **கிராபிக் டிசைனர் - இரவு** (Graphic Designer)

போன்ற வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் நாளை (09.01.2024) செவ்வாய்க்கிழமை கீழ் காணும் முகவரிக்கு காலை 9.00-12.00 மணிவரை உங்களது சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு வீதி, டச்சு வீதியில் (GPS வீதி) 4 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. 20 அடிப் பாதையுடன் மெயின் றோட் முகப்புடன் உண்டு.

தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம் :

காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 வரை

தொடர்பு: 076 755 8606
077 874 3204

(CS 27604) A-1

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க எதிர்வரும் தைபொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்



* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி. சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை ஊறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

சிறிராம் ஜுவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

தொடர்பு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334


## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலாதேவி மகேஸ்வரன்

(சின்னக்கா, பாரதி அன்ரி)

தோற்றம்
03.12.1949

மறைவு
03.01.2024



யாழ். வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், சித்தங்கேணிய வசிப்பிடமாகவும், தற்போது London ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி மகேஸ்வரன் அவர்கள் கடந்த (03.01.2024) புதன்கிழமை London இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், மகேஸ்வரனின் அன்பு மனைவியும், குமுதினி, ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோகுலன், மேனகா ஆகியோரின் அன்பு மாமியும், ரியா, டீஷா, கிரிஷான் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், கெங்காதேவி மற்றும் வேலுப்பிள்ளை (வட்டுக்கோட்டை), திருச்செல்வம் (Singapore), கமலாதேவி (வட்டுக்கோட்டை), மகேஸ்வரி (London), ஜெகதீஸ்வரி (London) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் Hendon (London) மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27603) S-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org